**O.S. 31/2018 , 23.08.2021, 12.25 pm - 12.45 pm**

**வா.சா.1, கோவிந்தராஜ், த/பெ.அப்பையா**

சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

அசல் வழக்கு எண்.69/2011-றகான வா.சா.1 சாட்சியத்தின் குறுக்கு விசாரணையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். 07.04.2014ல் அளித்த சாட்சியத்தின்பொழுது வீடு கட்டி முடிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளீர்கள்அது எப்பொழுது என்றால் சாட்சி சொல்வதற்கு 5 வருடத்திற்கு முன்பு ஆகும். பிரதிவாதி கோவிந்தன் முருகேசனுக்கு 15.12.2009-லேயே சொத்தையும், வீட்டையும் விற்றுவிட்டார் என்று சொன்னால் தெரியாது. எப்பொழுது விற்றார்கள் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மகேஸ்வரி சொத்து எந்த பக்கத்தில் உள்ளது என்றால் தாவா சொத்திற்கு வடக்கே உள்ளது. மகேஸ்வரி எப்பொழுது சொத்து வாங்கினார் என்றால் தெரியாது. மகேஸ்வரி பத்திரத்திலேயே 1ம் பிரதிவாதியின் சொத்திற்கு வடக்கே என்று செக்குபந்தி குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டை சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பே கூட்டுறவு சங்கத்தில் லோன் பெற்று வீடு கட்டியுள்ளதாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் கதவு எண் என்ன என்றால் தெரியாது. கதவு எண்.56 என்று சுமார் 25 வருடங்களுக்கு முன்பே 1ம் பிரதிவாதி பெயரில் உறுதிபடுத்தி கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. தாவா சொத்தில் 332 மின் இணைப்பு எண் உள்ளது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன், அது யார் பெயரில் உள்ளது என்று விசாரணை செய்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 2014ன் குறுக்கு விசாரணையின்பொழுது 10 ஆண்டுகளுக்கு மின் இணைப்பு 1ம் பிரதிவாதியின் பெயரில் பெறப்பட்டுள்ளது என்று சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.69/2011-றகான வா.சா.1 சாட்சியத்தின் குறுக்கு விசாரணையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 (வரிசை) ஆகும். ஏற்கனவே 1ம் பிரதிவாதி கட்டியிருந்த வீட்டிற்கு பக்கத்தில் மற்றொரு வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம், அது 5 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 2014ல் சாட்சியம் அளிக்கும்பொழுது பழைய வீடு இல்லாமல் புதிய வீடு கட்டப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. அந்த புதிய வீட்டில் 2ம் பிரதிவாதியின் இடத்தை தான் சுவாதீனம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே சாட்சியத்தின்போது புதிய வீட்டை கட்டி முடித்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.69/2011-றகான வா.சா.1 சாட்சியத்தின் குறுக்கு விசாரணையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 (வரிசை) ஆகும். மற்றொரு வீட்டின் கதவு எண்.85 என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளோம், அதை நான் சரிபார்த்தேனா என்றால் தெரியாது. நான் திம்மாம்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு இரண்டு முறை போட்டியிட்டு 1ம் பிரதிவாதியின் மனைவி வெற்றிபெற்றதால் அவர் மீதுள்ள விரோதத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே வழக்கில் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றும், ஆனால் தற்பொழுது தான் சுவாதீனத்தை வந்துள்ளோம் என்று வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சுவாதீனத்தை ஏற்கனவே ஒப்படைத்துவிட்டதாக கூறிவிட்டு தற்பொழுது தான் சுவாதீனத்தில் வந்துள்ளதாக அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த அறிவிப்பு ஏற்கனவே முடிந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டிருந்தும், இந்த வழக்கில் அதை பற்றி எந்த விவரமும் சொல்லாததால் வழக்கு செல்லாது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.138/9, 138/10 யார் பெயரில் உள்ளது என்றால் 138/9 என் பெயரிலும், 138/10 1ம் பிரதிவாதியின் பெயரிலும் உள்ளது. சர்வே எண்.138/9ல் தான் இரண்டாக பிரிந்து 138/10, 138/11 ஆக பிரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை அங்க அடையாளங்களை பார்வையிட நீதிமன்ற ஆணையரை நியமிக்க நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.69/2011 யார் தாக்கல் செய்தது என்றால் நான் தான் தாக்கல் செய்தேன். மேற்படி அசல் வழக்கு எண் இந்த நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அது குறித்து மேல்முறையீடு சென்றதில் பகுதியாக அனுமதிக்கப்பட்டது என்று சொன்னால் சர்வே எண்.138/9 எனக்கு உரிமையானது என்று கூறி தீர்ப்பானது. முன்னதாக வழக்கில் சுவாதீனத்தில் இருந்ததாக கூறியுள்ளீர்கள், அந்த வழக்கில் திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் அந்த வழக்கில் இறுதி தீர்ப்பான பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு சென்ற வழக்கில் எனக்கு சாதகமாக தீர்ப்பானது என்று கூறுவது தவறு என்றும், சுவாதீனம் பற்றிய பரிகாரம் தள்ளுபடியாகிவிட்டது என்றும், அது குறித்து மேல்முறையீடு செல்லவில்லை என்றால் சரியல்ல. சுவாதீனம் கோரி பரிகாரம் காலம் தாமதம் ஏற்பட்டு தாக்கல் செய்துள்ளதால் அதை சரிகட்ட அந்த வழக்கு தள்ளுபடி ஆன பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே கோர வேண்டிய பரிகாரத்தை அந்த வழக்கில் கோராமல் விட்டுவிட்டு தற்பொழுது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது தன்தவறால் தடைபடல் மற்றும் முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை:-</u> இல்லை.